"இனிமையான குழந்தைகளே! சிவபாபாவின் படத்தை ஒரு அறையில் வைத்துக் கொள்ளுங்கள், அடிக்கடி அவருக்கு முன் சென்று அமர்ந்து பேசினீர்கள் என்றால், முழு நாளும் நினைவு இருந்து கொண்டே இருக்கும்"

கேள்வி: சங்கமயுகத்தில் மட்டுமே அனுபவம் ஆகக்கூடிய புதிய மற்றும் தனித்துவமான அன்பு எது,?

பதில்: விசித்திரமான (சரீரம் இல்லாத) பாபாவுடன் அன்பு செலுத்துவது--இது புதிய அன்பாகும். நிராகார விசித்திர பாபா இந்த சாகாரத்தில் (பிரம்மாவின் உடலில்) வந்திருக்கிறார், நாம் அவருக்கு முன்னால் அமர்ந்திருக் கிறோம், நமக்கு சங்கமயுகத்தில் நேரடியாக ஈஸ்வரனுடைய அன்பு கிடைக்கிறது--இது புதியது மற்றும் தனித்துவ மானது ஆகும். முழு கல்பமும் தேகதாரி களோடு அன்பு செய்தோம், இப்போது தேகமில்லாத பாபாவிடம் அன்பு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட அன்பு சங்கமயுகத்தில் தான் ஏற்படுகிறது.

பாடல்: என்னுடைய மனம் எனும் வாயிலில் யார் வந்தது .................

ஓம் சாந்தி. எல்லையற்ற தந்தை விசித்திரமானவராக (சரீரம் இல்லாதவராக) இருக் கிறார், என்பதை குழந்தைகள் தெரிந்துள்ளார்கள். மேலும் இப்போது புதிய அன்பை எடுத்துக் கொண்டு நாம் பாபாவிடம் அமர்ந்திருக்கிறோம் அல்லது வந்திருக்கிறோம். இது புதிய அன்பு என்று சொல்லப்படுகிறது. ஈஸ்வரனுடைய அன்பு குழந்தைகளுக்கு ஒரு முறை தான் கிடைக் கிறது. உண்மையில் பரமபிதா பரமாத்மாவை நாம் அனைவரும் நினைவு செய்கிறோம், என்பதை குழந்தைகள் புரிந்து கொள்ள முடியும். அவர் அமர்ந்து குழந்தைகளுக்கு கற்பிக் கின்றார். அந்த நிராகார விசித்திர பாபா இவருக்குள் வந்திருக்கிறார். பரமபிதா பரமாத்மா ஆத்மாக்களாகிய நம்முடைய தந்தையாவார். இப்போது நாம் அவரை தெரிந்து-அறிந்து கொண்டோம். இந்த அன்பு கூட விசித்திரமானதாகும். அப்படியும் கூட எப்போதும் தேகதாரி களிடம் தான் அன்பு செலுத்தப்படுகிறது. இவர் விதேகி, தேகம் இல்லாதவர். நாம் அவருக்கு முன்னால் அமர்ந்திருக்கிறோம். அவர் மிகவும் அன்போடு வந்து புரிய வைக்கின்றார். அப்படியென்றால் புதிய விஷயம் அல்லவா? செல்வம் கிடைக்க வேண்டும், மாளிகை கிடைக்க வேண்டும், என்ற ஆசைகள் முன்பு இருந்தது, இப்போது அந்த அனைத்து ஆசைகளும் மாறி விட்டது. முழு உலகத்திலும் உங்களுடைய ஆசை மாறி விட்டது. இப்போது நாம் பாபாவின் மூலம் உலகத்தின் எஜமானர்களாக ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இப்போது நீங்கள் நேரடியாக முன்னால் அமர்ந்துள்ளீர்கள். அவர் தான் அனைத்து ஆத்மாக்களின் தந்தை, தூய்மையற்றவர்களை தூய்மையாக்கும் தந்தை சிவன், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். அவரைத் தான் நினைவு செய்கிறார்கள். இப்போது குழந்தை களாகிய நீங்கள் முன்னால் அமர்ந்துள்ளீர்கள். எல்லையற்ற தந்தையிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தி அடைய வேண்டும், என்று மனதில் ஊக்கம் இருக்கிறது. எவ்வளவு விசித்திரமான, தனித்துவம் வாய்ந்த, அதிசய மான பாபாவாக இருக்கிறார்! இதை வேறு யாரும் தெரிந்திருக்கவில்லை. பாபா எப்படி தன்னுடையவராக ஆக்கி, பிறகு கற்பிக்கின்றார், என்பதை நீங்கள் தான் தெரிந்துள்ளீர்கள். ஆக அடிக்கடி பாபாவை நினைவு செய்து கொண்டே இருக்க, அப்படி என்ன யுக்தி செய்வது? ஒவ்வொருவரும் தங்களுடைய வீட்டில்

சிவபாபாவின் படம் வைத்துக் கொள்ளுங்கள், என்று பாபா வழி சொல்கிறார். சிவபாபாவின் படத்தைப் பார்த்து, எல்லையற்ற தந்தை தூய்மை யற்றவர்களை தூய்மையாக்குபவர் வந்திருக்கிறார் தூய்மையான உலகத்தை ஸ்தாபனை செய்வதற்கு, என்று புரிந்து கொள்வீர்கள். அவரிடமிருந்து இப்போது நாம் 5 ஆயிரம் ஆண்டு களுக்கு முன் போலவே சொர்க்க இராஜ்யத்தின் ஆஸ்தியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நாம் சொர்க்கத்திற்குச் சென்று சரீரத்தோடு இராஜ்யம் செய்வோம், என்று ஆத்மா தெரிந்திருக் கிறது. எந்த விஷயம் கற்பனையில் கூட இல்லையோ, அவர் இப்போது வந்திருக்கிறார் என்றால், ஒரு சிறிய அறையை தன்னுடையதாக்கி சிவனுடைய படத்தை வைத்து, பாபா வந்திருக்கிறார், என்று அதில் எழுதிவிட வேண்டும். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்வதற்கு, நரகவாசிகளை சொர்க்கவாசிகளாக, ஆக்குவதற்கு அவர் வரத்தான் வேண்டும். அடிக்கடி சிவபாபாவைப் பார்த்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால், நினைவு இருக்கும். படத்தை கழுத்தில் கூட போட்டுக் கொள்கிறார்கள். கணவனுடைய படத்தைக் கூட கழுத்தில் போட்டுக் கொள்கிறார்கள் அல்லவா? குழந்தைகளாகிய உங்களையும் கூட தயார் செய்வித்துக் கொண்டி ருக்கிறார். பரலௌகீக தந்தையை நினைவு செய்வது மிகவும் விசித்திரமானதாகும். மற்ற அனைவருடைய நினைவையும் ஒன்று சேர்க்க ஒருவரை நினைவு செய்ய வேண்டும். எப்படி பக்தி மார்க்கத்தில் தங்களுடைய வீட்டில் பூஜை அறை அல்லது கோவிலை உருவாக்கு கிறார்கள் அல்லவா? அதேபோல் ஞான மார்க்கத்தில் கூட ஒரு அறையை ஒதுக்கி அதில் சிவபாபாவின் படத்தை வைக்க வேண்டும். பிரம்மா குமாரி களின் முரளி விகாரத்தில் இருந்து விடுவிக்கிறது என்று மனிதர்கள் புரிந்து கொள்கிறார்கள். அட இது நல்லது தானே. தூய்மை யாக ஆவதற்கு கண்டிப்பாக விகாரங்களை விடவேண்டி இருக்கும். பக்தியை ஏன் விடுகிறீர்கள்,? என்று கோபித்துக் கொள்கிறார்கள். நல்லது, நாங்கள் பக்தி செய்கிறோம், ஆனால் ஒருவருடைய பக்தி அவரைத் தவிர யாருடைய பக்தியும் இல்லை. மற்ற சேர்க்கையிலிருந்து புத்தியின் தொடர்பை துண்டித்து விட வேண்டும்.

உங்களுடைய யுத்தம் மாயையுடனாகும். நீங்கள் பாபாவை நினைவு செய்கிறீர்கள், மாயை துண்டிப் பதற்கு முயற்சி செய்கிறது. நமக்கு சிவபாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது--என்று நினைவு செய்து கொண்டிருப்போம். சிவபாபாவைப் பார்த்துக் கொண்டே இருந்தோம் என்றால், உங்களுடைய அறை வைகுண்ட மாகிவிடும். மீராவும் கூட பக்தி செய்த பொழுது வைகுண்டத் தின் காட்சியைப் பார்த்தார்கள். அவருக்கும் கூட காட்சியை செய்விப்பவர் சிவபாபா ஆவார். நாம் சிவபாபாவின் மூலம் உலகத்திற்கு எஜமானர்களாக ஆகிறோம், என்பது இப்போது உங்களுடைய புத்தியில் வந்திருக்கிறது. சிவன் என்ன செய்கிறார்,? ஏன் அவருக்கு பலியாகிறார் கள்,? என்பதை பக்தி மார்க்கத்தில் தெரிந்திருக்கவில்லை. அனைவரிலும் உயர்ந்தவர் சிவபாபா, அவரைத் தான் பரமாத்மா என்று சொல்லப்படுகிறது, என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். பரமாத்மாவிடமிருந்து கண்டிப்பாக புதிய பொருள்தான் கிடைக்கும். அவர் சொர்க்கத்தைப் படைக்கும் இறை தந்தை என்று அழைக்கப் படுகிறார். சொர்க்கத்தில் ஸ்ரீகிருஷ்ணர் இருக்கிறார், தந்தை என்று அவரை கூறமுடியாது. அவர் குழந்தையாக இருக்கிறார். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடிய தந்தை நிராகாரமானவர் ஆவார். அவர் தேகத்தை உடையவர் அல்ல. இன்றைக்கு அனைவரையும் தந்தை என்று சொல்லிக்

கொண்டிருக்கிறார்கள். காந்தியைக் கூட பாபுஜி, என்று சொல்கிறார்கள். ஆனால் அனைத்து தர்மத்தைச் சேர்ந்தவர் களும் சொல்ல மாட்டார்கள். அர்த்தத்தை புரிந்து கொள்வதே இல்லை. அனைவருக்கும் பாபுஜி (தந்தை) சிவபாபா, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். சிவன் தாத்தா அல்ல தந்தை ஆவார். அவர் நிராகார உலகத்தில் இருக்கிறார். கிருஷ்ணரை நினைவு செய்யலாம், ஆனால் அவர் வைகுண்டவாசி ஆவார். ரிஷி-முனிவர்கள் போன்ற அனைத்து தேகதாரிகளும் இங்கே இருந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். பரமாத்மா நிராகாரமானவர், அவருக்கு தேகம் இல்லை. சர்வ வியாபி (எங்கும் நிறைந்தவர்) என்ற ஞானத்தின் காரணத்தினால் யாருடைய புத்தியும் வேலை செய்யவில்லை. பாபா வந்து புத்தியின் பூட்டைத் திறக்கின்றார். இங்கே புதிய விஷயமாகும். வேறு எந்த சத்சங்கங்களிலும், சிவபாபா ஞானம் கொடுத்துக் கொண்டிருக்கிறார், என்று புரிந்து கொள்வதில்லை. அங்கேயோ அனைவரும் தேகதாரிகள் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். நாம் நிராகார தந்தையிடமிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம், என்ற நிச்சயம் உங்களுக்கு இருக்கிறது. கண்டிப்பாக நிராகாரமானவர் (சரீரம் இல்லாதவர்) சாகாரத்தில் (சரீரத்தில்) வந்தால் தான் அறிமுகத்தைக் கொடுக்க முடியும். கல்பம்-கல்பத்திற்கு பாபா வருகின்றார். வந்து எஜமானர்களாக ஆக்குகிறார். இருந்தாலும் மாயை எவ்வளவு துன்புறுத்துகிறது! தடையை ஏற்படுத்துகிறது. ருத்ர ஞான யக்ஞத்தில் அசுரர்களின் தடை ஏற்படுகிறது. தன்னை அசரீரி என்று புரிந்துகொள்ளுங்கள், என்று பாபா கூறுகின்றார். நாம் பாபா வினுடையவர்களாக ஆகியுள்ளோம். பாபா திரும்பி அழைத்துச் செல்ல வந்திருக்கிறார். இந்த சரீரத்தை விட்டு விட்டு இப்போது திரும்பிச் செல்ல வேண்டும். உங்களிடம் நீங்களே பேசுங்கள். சூட்சும மற்றும் ஸ்தூல தேகதாரிகள், போன்ற அனைவருடையை நினைவையும் விட வேண்டும். உறுதியாக நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆத்மாக்களாகிய நாம் பரந்தாமத்திலிருந்து வந்திருக்கிறோம். நாம் அங்கே வசிக்கக் கூடியவர்கள். சத்யுகத்தில் இத்தனை பிறவிகள் இராஜ்ஜியம் செய்தோம். 84 பிறவிகள் எடுத்திருக்கிறோம், இப்போது நாடகம் முடிகிறது. திரும்பிச் செல்ல வேண்டும். வீட்டில் ஏதாவது குழப்பம் இருந்தது என்றால், அறையில் சிவனுடைய படத்தை வைத்துக் கொள்ளுங்கள்.

பிராமணர்கள் சிவனுடைய பூஜை செய்யக் கூடாது, என்று மனைவிமார்களுக்கு சொல்கிறார் கள். ஆனால் சிவபாபா வருவதே தாய்மார்களுக்காகத் தான். நிறைய பேர் சென்று சிவன் மீது (சிறிய குவளையினால் நீர் ஊற்றுகிறார்கள்) அபிஷேகம் செய்கிறார்கள். பூஜாரிகள் குஷி அடைகிறார்கள், ஏனென்றால் தாய்மார்கள் அனைவரிலும் அதிகமாக பணம் போடுகிறார்கள். உண்மையான பக்தியின் பாவனை அபலைகளான தாய்மார் களுக்கு இருக்கிறது. ஆண்கள் வாள் போன்றவர்கள். அடிக்கடி வெளியே சென்று விடுகிறார்கள். புத்தியோகம் அதிகம் அலைபாய்கிறது. மனைவிக்கு கணவன் பக்கம் அதிகம் பற்று செல்கிறது. இது துக்கதாமம் என்று குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். இப்போது சுகதாமத்தை ஸ்தாபனை செய்யக்கூடிய பாபா வந்திருக்கின்றார். நாம் எப்படி பாபாவை நினைவு செய்வது, என்ற யுக்தியை உருவாக்க வேண்டும். அவரை இந்த கண்களின் மூலம் பார்க்கப்படுவதில்லை. இதை ஆத்மா சொல்கிறது-நம்முடைய சிவபாபா தந்தையாவார். சிவனுடைய படத்தைப் பார்த்தவுடன் மிகுந்த குஷி ஏற்படும்.

குழந்தைகளாகிய உங்களுடைய யோகம் கூட அவிபச்சாரியாக இருக்க வேண்டும். சிவனுடைய படத்தை வைத்து அடிக்கடி நினைவு செய்து கொண்டே இருங்கள். லஷ்மி-நாராயணனின் படம் நமக்கு எவ்வளவு பிடித்தமானதாக இருந்தது. பாபா (பிரம்மா) தன்னுடைய அனுபவ உதாரணத்தை சொல்லியிருந்தார். பிறகு லஷ்மி தாசியாகி காலைப்பிடித்து விட்டுக் கொண்டிருக்கிறாரே, என்று ஒரு நாள் சிந்தனை வந்தது. இப்படி இருப்பது சரியாக இல்லை. எனவே ஓவியரிடம், இவரை விடுவித்து விடுங்கள் (கால் பிடித்து விடுவதிலிருந்து), என்று சொன்னோம். மற்றபடி நாராயணனுடைய படம் பாக்கெட்டில் இருந்து கொண்டே இருந்தது. ஒன்று பாக்கெட்டில், ஒன்று கல்லா பெட்டியில் இருக்கும். அடிக்கடி பார்த்துக் கொண்டே இருப்பேன். அப்படியே சந்தோஷமாக இருக்கும். ஆனால் மறைமுகமாக செய்து கொண்டிருந் தேன். யாரும் பார்க்கவில்லை. இல்லையென்றால், இவர் என்ன செய்கிறார்? என்று சொல்வார் கள். முதலில் கிருஷ்ணரிடம் அன்பு இருந்தது, பிறகு அவரை விட்டுவிட்டு விஷ்ணுவிடம் அன்பு ஏற்பட்டு விட்டது. பிடிவாதமான பக்திபோல் இருந்தது. அதேபோல் இந்த நினைவும் கூட பிடிவாதமாக இருக்க வேண்டும், இதன் மூலம் மிக அதிகமான பலன் இருக்கிறது. அந்த பக்தியின் மூலம் எதுவும் இல்லை, அல்பகாலத்திற்கு கொஞ்சம் சுகம் கிடைக்கிறது. பிறகு அடுத்த பிறவியில் உழைக்க வேண்டும். பக்தியில், தொழில் போன்றவைகளில் உழைக்க வேண்டியுள்ளது. சம்பாதித்தால் தான் சாப்பிட முடியும். பாபா உங்களை இந்த ஒரு பிறவியில் அவ்வளவு உழைப்பு செய்ய வைக்கிறார் அதன்மூலம் நீங்கள் 21 பிறவிகள் பலனை அனுபவித்துக் கொண்டே இருப்பீர்கள். எந்த உழைப்பும் செய்ய வேண்டிய அவசியமும் இருக்காது. 21 பிறவிகள் எப்போதும் சுகமாக இருப்பீர்கள். ஆக பாபா அது போன்ற முயற்சி செய்ய கற்றுத் தருகின்றார், அவரை நினைவு செய்ய வேண்டும் அல்லவா? ஒவ்வொரு சுவாசத்திலும் நினைவு செய்யுங்கள், என்று சொல்கிறார். குருமார்கள் தங்களுடைய சீடர் களுக்கு மாலை உருட்டுங்கள், என்று கூறுகிறார்கள். இராமா-இராமா என்று சொல்லிக் கொண்டிருங்கள் அவ்வளவு தான்! இராமா-இராமா, என்று ஜபித்து-ஜபித்து புல்லரித்து விடுகிறது. இராமபுரிக்கு சென்று விட்டதைப் போல், இராம்-இராம் என்பதின் மகிழ்ச்சியில் ஆடு கிறார்கள். உங்களுக்கு பாபா கூறுகின்றார் - ஒரு சிவபாபாவின் நினைவை தொடர்ந்து நினைவு செய்யுங்கள். வேறு எதுவும் நினைவு வரக்கூடாது. ஆனால் மாயை கூட எதிர்க்கிறது. பக்தி மார்க்கத்தில் மாயை எதிர்க்கிறதா என்ன? இது மாயை மற்றும் ஈஸ்வரனின் குழந்தை களுக்குமான யுத்தமாகும். பகவான் இப்படி சொல்கிறார் மாயை இப்படி சொல்கிறது, என்று நாடகம் கூட உருவாக்குகிறார்கள். இப்போது சங்கமயுகமாகும். மாயையின் தலைகீழான தவறான எண்ணங்கள் வந்து கொண்டே இருக்கும். மனிதர்களையே தூரம் தூக்கி வீசும் அளவிற்கு புயல் வேகமாக வருகிறது. இது மாயை இராவணனுடைய புயலாகும். இராவணனிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் யுக்திகளை பாபா கூறிக் கொண்டே இருக்கிறார். பரமபிதா பரமாத்மா எங்களுக்கு இராஜயோகம் கற்றுக் கொடுக்கிறார், என்று நீங்கள் சொல்வீர்கள்.

இந்த சன்னியாசத்தை உங்களுக்கு யார் செய்வித்தது?, குரு யார்? என்று உங்களிடம் யாராவது கேட்பார்கள். பரமபிதா பரமாத்மா, என்று சொல்லுங்கள். பகவான் வந்து சன்னியாசம் கொடுக்கப் பட்டவர்கள் யாரும் இருக்க

மாட்டார்கள். அவர்கள் அனைவரும் மனிதன், மனிதனுக்கு சன்னியாசம் செய்விக்கிறார்கள். இங்கே பாபா வந்து சொல்கிறார்-தேகம் உட்பட என்ன வெல்லாம் சம்பந்தம் இருக்கிறதோ அவற்றை விடுங்கள், இந்த பழைய உலத்தை தியாகம் செய்து புதிய உலகத்தை நினைவு செய்யுங்கள்-- சன்னியாசிகள் இப்படிச் சொல்வார்களா என்ன? இப்போது நடைமுறையில் பழைய உலகம் வினாசம் ஆக வேண்டும், ஆகையினால் அனைத்தையும் புத்தியின் மூலம் தியாகம் செய்து ஒரு பாபாவிடம் புத்தியை ஈடுபடுத்த வேண்டும். நீங்கள் நிச்சயம் செய்கிறீர்கள் அல்லவா? தேகதாரிகளை நினைவு செய்தீர்கள் என்றால் நிச்சயம் அரைகுறையாகிவிடும். சர்வ தர்மானி............ நான் இன்னாராக இருக் கின்றேன், இப்படி இருக்கின்றேன்........... அவை அனைத்தையும் விட்டுவிட்டு தன்னை ஆத்மா, என்று புரிந்து கொள்ளுங்கள். 84 பிறவிகளை நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். இப்போது குஷியோடு திரும்பிச் செல்கிறீர்கள். கைகளைத்தட்ட வேண்டும். ஆத்மாக்களாகிய நாம் ஒரு சரீரத்தை விட்டு மற்றொன்றை எடுக்கிறோம். தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ள வேண்டும். ஆத்மாக்களாகிய நாம் முதலில் வெண்மையாக (தூய்மையாக) இருந்தோம். பிறகு 84 பிறவிகள் எடுத்தோம். இப்போது திரும்பிச் சென்று பிறகு வந்து சொர்க்கத்தில் இராஜ்யம் செய்வோம். இந்த சுய தரிசன சக்கரத்தைச் சுற்றுவது எவ்வளவு எளிதாக இருக்கிறது. சிவனுடைய படம் பாக்கெட்டில் இருந்து கொண்டே இருக்க வேண்டும். பாபா நீங்கள் வந்திருக்கிறீர்கள், எவ்வளவு இனிமையாக இருக்கிறீர்கள், எங்களுடைய தந்தை அல்லவா? இப்படியெல்லாம் பேச வேண்டும். பக்தியில் கிருஷ்ணருடன் இப்படி பேசினீர்கள் அல்லவா? சிவனுடைய லாக்கெட் முதல்தரமானதாக தங்கத்திலும்-வெள்ளியிலும் செய்வோம். ஏழை களுக்கு தங்கத்திலும், செல்வந்தர்களுக்கு வெள்ளியிலும் தருவோம். இந்த தாய்மார்கள் மிகவும் இனிமையானவர்களாக இருக்கிறார்கள். கிராமத்தார்களிடம் பாவனை நன்றாக இருக்கிறது. சாதாரண குழந்தைகளைப் பார்த்து பாபாவுக்குக் கூட மிகுந்த குஷி ஏற்படுகிறது. கிருஷ்ணரை கிராமத்து சிறுவன் என்று சொல்லப்படுகிறது அல்லவா? கிருஷ்ணர் கிராமத்து சிறுவன் ஆக முடியாது. அவர் சொர்க்கத்தின் எஜமானராக இருக்கிறார். இவருடைய விஷயங் களையும் (பிரம்மா) கிருஷ்ணருடைய விஷயங்களையும் கலந்து விட்டார்கள். கிராமத்தின் அனைத்து அனுபவங்களும் இவருக்கு (பிரம்மாவிற்கு) இருக்கிறது. ஆக சிவபாபாவோ அல்லது கிருஷ்ணரோ கிராமத்து சிறுவனாக ஆக முடியாது. ஆமாம், இவர் (பிரம்மா) சிறுவயதில் அப்படி இருந்தார். கிராமத்தில் தான் வளர்ந்தேன். ஆக பிறகு இந்த சாதாரண உடலில் பாபா வந்து பிரவேசித்திருக்கிறார். பாபா முக்கியமான விஷயத்தைப் புரிய வைத்திருக்கிறார், அனைத்திற்கும் நினைவு தான் ஆதாரமாகும். பாபாவின் நினைவை ஒரு போதும் மறக்கக் கூடாது. நான் தந்தையை மறந்து விடுகிறேன், என்று லௌகீக குழந்தை எப்போதாவது சொல்கிறதா? காதலிகள் எப்போதாவது காதலனை மறக்கிறார்களா என்ன? அப்படி நடக்கவே முடியாது. இது தான் குழந்தைகளாகிய உங்களுடைய உழைப்பாகும். நிரந்தரமான நினைவின் பயிற்சியின் மூலம் தான் பாவகர்மங்கள் வினாசம் ஆகும். இல்லையென்றால் பிறகு தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும். வெற்றி மாலையில் வர முடியாது. பாபாவுடைய அதிசயம் பாருங்கள், அவர் வந்து வயதானவர்களை, ஏழைகளை, கன்னியர்களை, அகலிகைகள் போல் சபிக்கப்பட்டவர்களை, கூனியைப் போன்றவர் களை தன்னுடையவர்களாக மாற்றுகிறார்.

பார்க்கப்போனால் படத்தின் அவசியம் ஏதும் இல்லை. ஆனால் மாயை மறக்க வைத்து விடுகிறது, ஆகையினால் படம் வைக்கப்படுகிறது. நாம் பாபாவிடம் செல்கிறோம், என்பது புத்தியில் இருக்க வேண்டும். முக்தி-ஜீவன்முக்திக்கான வழியைப் பார்த்தாகிவிட்டது. வேறு எந்த வழிகாட்டியும் இல்லை. இதனை இந்திரபிரஸ்தம் (இந்திரசபை) என்றும் சொல்லப்படுகிறது, யாராவது தூய்மை யற்றவர்கள் மறைந்து வந்து அமர்ந்தார்கள் என்றால் கல்புத்தி உடையவர்களாக ஆகிவிடுவார்கள். பாபா அனைவருடைய மனதைத் தெரிந்தவர் அல்லவா! இந்த பாபா (பிரம்மா) வெளியில் உள்ளதை (நடத்தைகளை வைத்து தெரிந்து கொள்பவர்) தெரிந்து கொள்பவராவார். அந்த பாபாவிற்கு (சிவபாபா), தூய்மையற்றவர் மறைந்து அமர்ந்திருக்கிறார், என்று உடனே தெரிந்து விடுகிறது. ஆக யார் அப்படிப்பட்ட தூய்மை யற்றவரை அழைத்து வந்தாரோ அவருக்கும் யார் தூய்மையற்றவர் வந்து அமர்ந்தாரோ, அவர்கள் இருவருக்கும் தண்டனை கிடைக்கும். ஆகையால் ஒருபோதும் தூய்மை யற்றவர்களை அழைத்து வரக் கூடாது. சட்டம் அதுபோல் கடுமையாக இருக்கிறது. எந்த தூய்மையற்ற மோசமானவர்களையும் அமர வைக்கக் கூடாது. இல்லையென்றால் மிகக் கடுமையான தண்டனைக்குப் பாத்திரமானவர்களாக ஆகிவிடுவீர்கள். இங்கே எந்த திருட்டுத் தனமும் நடக்காது. பாவம் மற்றும் புண்ணியத்தின் கணக்கு-வழக்கு தர்மராஜனிடம் இருக்கிறது அல்லவா. நல்லது.

இனிமையிலும் இனிய செல்லமான குழந்தைகளுக்கு ஆன்மீக தாய், தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) அனைவருடைய நினைவையும் ஒன்று சேர்த்து, புத்தியின் தொடர்பை அனைவரிடத்திலிருந்தும் துண்டித்து ஒரு பாபாவின் நினைவில் இருக்க வேண்டும். சிவபாபாவின் அறையை உருவாக்கி அவருடைய அவிபச்சாரி நினைவில் அமர வேண்டும்.

(2) தன்னிடத்தில் தானே இனிமையிலும்இனிய விஷயங்களைப் பேச வேண்டும். முதலில் நாம் எவ்வளவு அழகானவர்களாக (தூய்மையாக) இருந்தோம், பிறகு 84 பிறவிகள் எடுத்தோம், இப்போது குஷியோடு திரும்பிச் செல்கிறோம்--இப்படி தன்னிடத்தில் பேசி சுய தரிசன சக்கரத்தை சுற்ற வேண்டும்.

வரதானம் : சுயசிந்தனை மற்றும் சுயத்தின் தரிசனத்தின் மூலம் வைரத்திற்கு சமமாக விலைமதிப்புடைய வாழ்க்கையை அனுபவம் செய்யக்கூடிய கறையற்றவர் ஆகுக.

வைரத்திற்கு சமமாக விலைமதிப்புடைய வாழ்க்கையை அனுபவம் செய்வதற்காக சதா சுயத்தை பற்றி சிந்தனை செய்யுங்கள், மற்றும் சுயத்தை தரிசனம் செய்பவர் ஆகுங்கள், ஏனெனில் வைரத்தில் கறை ஏற்படுத்துவது இரண்டு விஷயங்கள் தான் - ஒன்று மற்றவர்களை பார்ப்பது, இரண்டாவது மற்றவர்களை பற்றி சிந்தனை செய்வதாகும். இந்த இரண்டு விஷயங்களின் தொடர்பின் வண்ணம் சுத்தமான வைரத்தை கறைபடிந்ததாக மாற்றிவிடுகிறது, ஆகையால் இந்த முக்கியமான விதையை சமாப்தி செய்து விட்டு, சுயத்தை பற்றி

சிந்தனை செய்யுங்கள், மற்றும் சுயதரிஷன சக்கரத்தை சுழற்றினீர்கள் என்றால் தூசி மற்றும் கறை படியாது, எப்பொழுதும் கறையற்ற உண்மையான வைரமாக, ஜொலிக்கக்கூடிய விலை மதிப்புடைய வைரம் ஆக முடியும்.

சுலோகன்: விசித்திரமான தந்தையின் சித்திரம் மற்றும் சரித்திரத்தை நினைவு செய்யக்கூடியவர் தான் சரித்திரவானாக இருக்கிறார்கள்.

.